REG. NO. M. 2997.

தனிப்பிரதி அணு 1

ஆசிரியர் :
யாழ்ப்பாணம்
தென்கோவை.
ச. கந்தைய பிள்ளை
தமிழ்ப் பண்டிதர்,
சிலோன்.

RÉPUBLIQUE FRANÇAISE

LIBERTÉ.—ÉGALITÉ.—FRATERNITÉ.

# VITTAGAM

LE RÉDACTEUR
TENKOVAI
S. CANDIAH PILLAI.
Tamil Pandit
Jaffna
CEYLON.

JOURNAL HEBDOMADAIRE PARAISSANT LE JEUDI

# வித்தகம்

வியாழக்கிழமை தோறும் வெளிவருவது

Bureau de la Direction:—
RUE D'AMBALATADOU AYER
MADAM No. 2,
Pondichéry.

நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது. குறள்.

காரியாலயம் :—
அம்பலத்தாடுஐயர் மடத்து வீதி, நே 2
புதுவை.

VOL. II. புதுவை, பவ ஹூ கார்த்திகை மீ கச உ (29—11—34) NO. 1.

## திருவாசகம்.

அரைசே பொன்னம் பலத்தாடு மமுதே யென்றுன் னருணோக்கி
இரைதேர் கொக்கொத் திரவுபக லேசற் றிருந்தே வேசற்றேன்
கரைசே ரடியார் களிசிறப்பக் காட்சி கொடுத்துன்னடியேன்பாற்
பிரைசேர் பாலி னெய்போலப் பேசா திருந்தா லேசாரோ.

ஏசா நிற்ப ரென்னையுனக் கடியா னென்று பிறரெல்லாம்
பேசா நிற்ப ரியான்தானும் பேணு நிற்பே னின்னருளே
தேசா நேசர் சூழ்ந்திருக்குந் திருவோ லக்கஞ் சேவிக்க
ஈசா பொன்னம் பலத்தாடு மெந்தா யினித்தா னிரங்காயே.

இரங்கு நமக்கம் பலக்கூத்த னென்றென் றேமாந் திருப்பேனை
அருங்கற் பனைகற் பித்தாண்டா யாள்வா ரிலிமா டாவேனோ
நெருங்கு மடியார் களுநீயு நின்று நிலாவி விளையாடும்
மருங்கே சார்ந்து வரவெங்கள் வாழ்வே வாவென் றருளாயே.

உ

திருவருள் துணை.

ஓம் நந்திபதி கோல்

காலமுண் டாகவே காதல்செய்
துய்மின் கருதரிய
ஞாலமுண் டானோடு நான்முகன்
வானவர் நண்ணரிய
ஆலமுண் டானெங்கள் பாண்டிப்
பிரான்றன் அடியவர்க்கு
மூலபண் டாரம் வழங்குகின்
றான்வந்து முந்துமினே.

[திருவாசகம்]

# வித்தகம்

புதுவை,
பவ ௵ கார்த்திகை ௴ 14 ௳

## எமது பத்திரிகை.

திருவோங்கு வளப் புதுவை என்னும் திருப்பெருந்துறையில் எழுந்தருளியிருக்கும் ஞானசாரியனாகிய நந்தி யெம்பெருமான் திருவருளாணையால், கலி ஐயாயிரத்து முப்பத்தைந்தாம் ஆண்டாகிய சென்ற ஸ்ரீமுக ஆண்டு கார்த்திகைத் திங்களில் கார்த்திகைத் திருநாளில், புதுவையம்பதியாம் கோகழியில் உதயமான எமது "வித்தக" ஞானபாஸ்கரன் நிகழும் பவ ஆண்டு கார்த்திகைத் திங்களில் கார்த்திகை நாளில் ஓராண்டு நிறைவு பெறுவதாயினன். வித்தக வடிவினனாகிய எம்பெருமான் அருண்மாரியாகப் பொழிந்த வேத உண்மைகளே ஐம்பத்தொரு "வித்தகக்" கதிர்களால் முக்கியமாக விளக்கப்பட்டுள்ளன. கயிலை முதற் குரவனாகிய எம்பெருமான் அருளால் பெறப்படும் உண்மைச் சாதகங்களால் உடலுயிர்கள் ஒழிவற ஒன்றி "மணங்கமழ் தெய்வத்து இளநலம்" திகழ அமலமடைந்து அருள் வடிவாய்ப் பிரம சொரூபமாகிய பரத்தில் பரமாகிய ஞானகாசத்தில் ஒடுங்கிச் சிவாங்கமாதலே உண்மை முத்தி என முழங்கும் பழைய உண்மைச் சைவக் கொள்கையே — அநாதியான இயற்கை நெறியாகிய சிவ நெறியே பிரபல சுருதிப் பிரமாணங்களோடு விரிவுற விளக்கிப் பசுமரத்தாணி போல நன்று நிலைநாட்டப்பட்டது.

சைவம், சைவ சமயம் — இந்து மதம், எழுதாமறை — நான் மறை — மறை, வேதம், ஆகமம், அங்கம், உபநிசத்து, வேதாந்தம், சித்தாந்தம், சமரசம், கந்தழி, கந்தருவம், சமாதி, யோகம், சகசநிட்டை, ஞானம், முத்தி, இருவினையொப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம், துவிஜத்துவம் (மாற்றிப் பிறத்தல்) உபநயனம், காயத்திரி, பஞ்சாக்கரம், திருநீறு, கங்கை யணிதல், மதி சூடல், சர்ப்பாபரணம் முதலியவற்றின் உண்மைப் பொருளும் இலக்கணமும் எம்பெருமான் திருவடி எனப்படும் அமலஐகாரப் பெட்பும், தூல சுக்கும நாதங்களின் இயல்பும், அவற்றால் ஆம் பயனும், கற்பங்களின் இயல்பும், மௌன மந்திராதிக்ய வித்தை என்னும் அரிய பெரிய மகாரப் பெட்பும், வியாப்பிய வியாபகங்களாகிய ஆரியம் தமிழ் என்பனவற்றின் இலக்கணமும் — பதி பசு பாசம் — முதல் கரு உரி என்பனவற்றின் இலக்கணமும், தூல சுக்கும சரீரங்களின் இயல்புகளும், பஞ்சதிணைகளாகிய பஞ்ச பௌதிகங்களின் இயல்பும், விமல தேகமாகிய விதேக இலக்கணமும், அமல வடிவமாகிய பிரணவ மந்திர சரீரம் என்னும் ஓ வடிவின் இலக்கணமும், அருந்தல் பொருந்தல் அனந்தல்களால் முன்னிலைச் சிற்றின்பமே படிமுறையால் திரிதலடைந்து பேரின்பமாய்ப் பூரணப்படுதலால் அமலம் சித்திக்கும் என்பதும், காதல் என்பதன் இலக்கணமும், நஞ்சுண்ணல் — ஆலத்தை அமுதமாக்கல் என்பதன் உண்மையும், திருவருணாட்டத்தின் பண்பும் பயனும், தமிழர், தொண்டர், தென்னர், அடியவர், சைவர், ஆரியர், அந்தணர், பார்ப்பார், பிராமணர் என்னும் திருநாமங்களின் உண்மைப் பொருளும், இத்திருநாமங்களால் வழங்கப்படுதற்கு உரியார் இவர் என்பதும், அடியார் இயலும், பணி செய்து கிடத்தலின் பண்பும், அன்பு அருள் என்பனவற்றின் உண்மைப் பொருளும் இவற்றின்பண்பும் பயனும், சீவர்கள் முத்தியடைதற்கு ஏற்ற சாதக யோக விதிகள் அவ்வச் சீவர்கள் சடபேதம் கர்மபேதம் என்பனவற்றிற்கு ஏற்ப அளப்பிலவாகும் என்பதும், சவிகற்ப நிர்விகற்ப நிட்டைகளாகிய உபாசக நிட்டையின் இயல்பும் இவற்றின் சிறுமையும், சகச நிட்டையின் அருமை பெருமையும், மருட் சித்திகளாகிய மாயா சித்திகளின் சிறுமையும், அருட் சித்திகளின் அருமை பெருமையும், போலிச் சித்தரின் சிறுமையும் மெய்யடியாராகிய உண்மைச் சித்தர்கள் அருமை பெருமையும், சித்தர் நூல்களின் அருமை பெருமையும் இன்னோரன்ன பிறவுமாகச் சாத்திரங்கள் என வழங்கும் ஏடுகளாலும் அவற்றின் உரைகளாலும் அறிய முடியாத எத்தனையோ பல உண்மைகள் எல்லாம் இருக்கு முதலிய சம்ஸ்கிருத வேத நூல்களையும், சாந்தோக்கியம் முதலிய முக்கியமான உபநிடதங்களையும், தமிழ் வேதங்களாகிய திருவாசகம், தேவாரம், திருவாய்மொழி, திருமந்திரம், ஔவை குறள், சித்தர் நூல்கள் முதலியவற்றையும், சங்கச்சான்றோர் நூல்களையும், சூதசங்கிதை, ஞானவாசிட்டம், சித்தாந்த சிகாமணி, சுத்த சாதகம் முதலியவற்றையும் பிரமாணங்களாகக் கொண்டு நன்று விளக்கி நிறுவப்பட்டன.

மேலும் உலகியலாகிய கற்பனை என்னும் போலியின் இயல்பும் வாய்மையான பிரமசரியம் இல்லறம் துறவறம் என்பனவற்றின் இலக்கணமும், உடம்பின் அருமை பெருமையும், அஃது எவ்வாற்றானும் பிணவியலடைவது பிறவி நெறியேயன்றி முத்தி நெறியன்று என்பதும், உடலும் உயிரும் சத்தி சிவ வடிவாய் அந்நியோந்நிய சம்பந்தம் உடையன என்பதும், உடலே ஞான சத்தி வடிவாய் அருள் வடிவாய் வீடாக, அதனைப் பிரியாத உணர்ச்சி வடிவான உயிர் சிவமாகின்றது — சிவாங்கமாகின்றது என்பதும், அசுத்த தநுவாகிய காயம் விமலமடைவதே காய சித்தி என்பதும், இவ்வாறு விமலமாய் அமலமாதற்குரிய தந்திரமே காயத்திரி என்பதும், மாற்றிப் பிறத்தலாகிய துவிஜத்துவமே காயத்திரி அநுட்டானத்தின் பயன் என்பதும், மெய்யடியார் எல்லாம் காயசித்தி பெற்றே முத்தியடைந்தனர் என்பதும், விக்கிந விநாயகப் பேறு, முருகன் அவதாரம் முதலிய தெய்வீக வடிவங்கள் எல்லாம் சீவன் முத்தி நிலையுள் அடங்கும் என்பதும், மெய்யடியார் அருமை பெருமை அளவிடுதற்கு அரியது என்பதும் அவர்கள் சரித்திரம் வாய்மையாக எழுதப்பட்டு வழங்கவில்லை என்பதும், இன்னோரன்ன பிறவும் இனிது விளக்கப்பட்டுள்ளன.

காலனை உதைத்தல், காலாட்டல், கண்ணப்பல், தாதைதாள் அறவீசல், நந்தி விலகுதல், அக்காணி கழித்தல், பால்கறத்தல், பாலுண்ணல், சீதையை வந்தித்தல் என்பனவற்றின் உண்மையும், முப்பு, பூநீர் முதலிய பரிபாஷைகளின் பொருளும், ஆரூர், காஞ்சி, சிதம்பரம் முதலிய இடுகுறி நாமங்களால் குறிக்கப்படும் உண்மை நிலைகள் இன்னவை என்பதும் நன்று விளக்கிக் கூறப்பட்டுள்ளன.

உடலை விட்டு உயிர் பிரியாது ஒழிவற ஒன்றி நித்தியத்துவம் பெறுதலே மீண்டுவாரா உண்மைநிலை என்பதும், முன்னிலையாகிய மாயா காரியங்களை நிறை முறையோடு பஞ்சீகரணித்து உடலுயிர் அமலம் பெறுதலே முத்தி சாதனமன்றி வேறு தடம் இல்லை என்பதுமே எமது பத்திரிகையில் அதிகரித்து நின்றபொருளாகும்.

இத்தகைய அரிய பெரிய வேத உண்மைகள் எல்லாம் திருவருட் சகாயத்தாலன்றிப் படிப்பு வல்லபத்தால் அறியப்படுவன ஆமோ? உண்மைகளை அறிவதற்கே பலகோடி சென்ம புண்ணியம் வேண்டும் என்ப. வேதம் ஆகமம் முதலிய பெயர் பூண்டு வழங்கும் நூல்கள் எல்லாம் இவ் உண்மைகளை நிறை முறையான கற்பனைகளால் கௌணமாகக் கூறியனவேயன்றி "வித்தகம்" கூறியதுபோல வெளிப்படையாக விளக்கிக் கூறவில்லை என்பது முதலாம் ஆண்டில் இதன் பால் வெளிவந்த கட்டுரைகளை ஆழ்ந்து நோக்கும் ஆற்றலும் காதலும் வாய்ந்த அறிஞரால் மறுக்கமுடியாத உண்மையே ஆகும். பன்னெடுங் காலமாகப் பலர்க்கும் மறைபொருளாய் இருந்த உண்மை முத்தியும் அதற்குரிய முக்கிய சாதனமாகிய சகச நிட்டையின் இலக்கணமும் இயற்கை நிலையாகிய அத்தகைய நிட்டை கைவருதற்குரிய பொதுவான ஒழுக்கங்களும் நிட்டை கைவரப் பெற்ற சீவன் முத்தர் இலக்கணமும் மிக விரிவாக விளக்கப் பட்டுள்ளன.

சடபேதம் கர்மபேதம் என்பனவற்றிற்கு ஏற்ற சாதகங்கள் குருநாதன் வாயிலாகவே அறிய வேண்டிய வாதலின் அவை ஒழிந்த பொதுவான உண்மைகள் அக் குருநெறியை அவாவி நிற்றற்கு ஏற்றவாறு விளக்கமுற உரைக்கப்பட்டன. குருநெறியின் மாண்பும் அதனை அடைதற்கு ஏற்ற உபாயங்களும் குரு உபதேசிக்கும் முறையும் வாய்மையான தீக்கையின் இலக்கணமும் பிறவும் நன்று விளக்கப்பட்டுள்ளன. மறம் பொருள் துன்பம் மரணம் என்பனவே உலகியல் என்பதும் இவை அநித்தியம் என்பதும், அறம் பொருள் இன்பம் வீடு என்பனவே வாய்மை என்பதும் இவை நித்திபம் என்பதும் இவற்றின் இலக்கணமும், அறமே வீடாகித் திரிதலடையும் என்பதும் அதுதான்—அவ்வீடுதான் அசுத்தம் நீங்கி அமலமடைந்து அருளாகித் திரிதலடைந்த சரீரமேயன்றி வேறல்ல என்பதும் பிரபல சுருதிப் பிரமாணங்களோடு விரிவுற விளக்கி நிறுவப்பட்டன.

இவ்வாற்றால், முதலாம் ஆண்டில் வெளிவந்த 51 தலையங்கமான பொருளுரைகளாலும், தொடர்பாக வெளியிடப்பட்ட "தலையாய அறம்" "உடம்பின் அருமை பெருமை" "ஆரியமும் தமிழும்" "உயிர் வருக்கம்" "உடலுயிர்ச்சம்பந்தம்" என்னும் நீண்ட கட்டுரைகளாலும் பலகாலமாகப் பலர்க்கும் மறைபொருளாய் இருந்த உண்மைச் சைவக் கொள்கையின் முக்கியமான அம்சங்கள் எல்லாம் விளக்கமுற வெளியிடப்பட்டன என்றே கூற ஆம். திருவாசகம், திருமந்திரம், தேவர் குறள் என்பனவற்றில் உள்ள அரிய செய்யுட்கள் சிலவற்றின் உண்மைப் பொருளும் கூறப்பட்டுள்ளன.

மேல், இரண்டாவதாகிய இவ் ஆண்டில், முதலாம் ஆண்டில் தொகை வகைவிரியான் உரைக்கப்பட்ட உண்மைகளையே அடிப்படையாகக் கொண்டு இவற்றில் விரிவுற விளக்கிக் கூறப்படாத அம்சங்களும் இவற்றோடு தொடர்புடையனவாய் இவற்றில் கூறப்படாத வேத உண்மைகள் பிறவும் விரிவுற விளக்கிக் கூறப்படும். இவற்றோடு, மற்றைய பத்திரிகைகள் சிலவற்றில் வெளிவந்த சமய சம்பந்தமான விஷயங்களில் காணப்படும் ஆட்சேபங்களுக்கும், மாறுபாடான கொள்கைகளுக்கும் அவகாசத்துக்கு ஏற்றவாறு சமாதானமும் கூறப்படும். ஆதலால் எமது விஷயங்களில் காணப்படும் ஆட்சேபங்களுக்குச் சமாதானம் பெற விரும்புவோர் அவற்றை விளக்க

முறை எழுதி எமக்கே அனுப்பி வைப்பாராயின், அவற்றை எமது "வித்தக" வாயிலாக வெளியிடுவதோடு, தக்க சமாதானமும் ராஜதம் சிறிதுமின்றி உவகையோடு வழங்கப்படும் என்பதனையும் வணக்கத்தோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

முதலாம் ஆண்டில் வெளிவந்த சில பல கட்டுரைகள் கடின நடையுடையனவாய் விளங்குதற்குக் கஷ்டமாயின என்று எமது பத்திரிகை அபிமானிகள் பலர் குறை கூறியதும் உண்டு என அறிகின்றேம். சிலகட்டுரைகள் சிலகாரணங்களால் உயரிய நடையில் எழுதப்பட்டன என்பதும் உண்மையே ஆயினும், விஷயங்கள் எல்லாம உலகில் வழங்கும் சாத்திரங்களாலும் படிப்பு வல்லபத்தாலும் அறிதற்கு அரியனவாய் இருந்தமையும் பரிபாஷைகள் மலியப் பெற்றமையுமே எளிதின் விளங்க முடியாமைக்கு முக்கிய காரணம் எனக் கொள்ளற்பாற்று. ஆதலால் மேல் எழுதப்படும் கட்டுரைகள் பரிபாஷை விளக்கங்களோடு பலர்க்கும் எளிதில் விளங்கக்கூடிய நடையில் எழுதப்பட ஆம் என்பதே துணிபு. ஆராமை கொண்டு பன்முறை படிப்போர்க்கு உண்மை புலப்படாததாகாது.

உலகத்திலே பாரமார்த்திகமான விஷயங்களை அறிவதில் ஆர்வம் உடையார் சிலர் பலர் உளரெனினும், அவருள்ளும் அபிமானப்பேயால் ஆவேசிக்கப்படாது காய்தல் உவத்தல் அகற்றி உண்மையை நாடுவோர் மிகச் சிலர் என்றே கூறவேண்டியதாகின்றது. அபிமானம் பொல்லாது. அஃது எப்பொழுதும் நமது ஆக்கத்துக்குத் தடையானதே! எமது சைவ சமயம், எமது சிவபெருமான், எமது வேதம், எமது சமயகுரவர், எமது சேக்கிழார், எமது சந்தானகுரவர், எமது சாமியார், எமது சம்ஸ்கிருதம், எமது தமிழ், எமது சாத்திரங்கள் என்று இப்படியான அபிமானத்தையே அடிபடையாகக் கொண்டு உண்மையை நாடத்தொடங்கினுல் அத்தகைய நாட்டம் இனிதின் இயன்று உண்மை காணப்படுதல் முடியாத காரியமே! வாரப்பாடாகிய உவத்தலால் தீயவும் நல்லவாம். வெறுப்பாகிய காய்தலால் நல்லவும் தீயவாகும். இவ்வாருன அபிமானமே—விபரீதமே வாய்மையைக் கைக்கொண்டு ஒழுகுவதற்குத் தடையாய்—முட்டுக்கட்டையாய் உள்ளதுஎன்க. உலகியல் இதுவே என்க.

## சீவக சிந்தாமணி.

வாரம்பெற்றுழித்தீயவுநல்லவாம்
தீரக்காய்ந்துழிநல்லவும்தீயவாம்
ஒரும்வையத்தியற்கையன்றேவென
வீரவேனெடுங்கண்ணிவிளம்பினுள்.

### "வித்தக"ச் சந்தா நேயருக்கு விண்ணப்பம்.

எமது முதலாம் வருட "வித்தக" சந்தாவை இதுவரை அனுப்பாதவர்கள் அத் தொகையைப் பின் வரும் விலாசத்துக்குத் தயைகூர்ந்து அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கோள்ளுகிறேம்.

இங்ஙனம்

ரா. நாகரத்தினம்.

வித்தகம் ஆபீஸ்,

புதுவை.

தற்கால உலகம் பெரும்பான்மை ஆராய்ச்சி உலகமே ஆகின்றது. மேனுட்டுத் தத்துவ சாஸ்திரிகள் சரிதாசிரியர் ஊக்கமும் உழைப்புமே எமது நாட்டாராகிய தற்காலத்தவர் சிலர் பலர் உண்மையை நாடுதற்கும் ஏதுவாயின என்பது மிகையன்று. எமது நாட்டாருள்ளும் சிலர் எல்லா விஷயங்களிலும் இயன்றவரை ஆராய்ச்சிகள் நிகழ்த்திக் கொண்டே இருக்கின்றனர். எனினும் பாரமார்த்திக விஷயத்தில் பலர் திருவருளை நாடி உண்மையைக் காணும் ஆற்றலும் காதலும் இன்றி அபிமான மேலீட்டினுல் குருட்டு நம்பிக்கைகளை ஒழித்து உய்தியடைய மனம் ஒருப்படாதவராய் இருக்கின்றனர். வாய்மையான கல்வி இல்லாமையால் நிறை முறை யற்ற லௌகிக அநுபவங்களில் கண்ணும் கருத்துமாய் இருப்பதும், லௌகிகம் வேறு பாரமார்த்திகம் வேறு எனத் துணிந்து கொண்டமையுமே இதற்குக் காரணமாகும் என்றே கூறவேண்டியதாகின்றது. உண்மையை அறிய முடியாமையாற்றுன் பறம் பொருள் துன்பம் மரணம் என்பனவற்றையே அறம் பொருள் இன்பம் வீடு என அமைந்து இம்மை மறுமைப் பயன்களை ஒருங்கே இழந்து விடுகின்றனர். முன்னிலையாகிய பிரபஞ்சம் கடவுள் வடிவமே—பிரம சொரூபமே எனச் சுருதிகள் முழங்குவதன் உண்மையைக் கடைப்பிடித்து அத்தகைய பிரம சொரூபமாகிய முன்னிலையை நிறை முறையோடுகண்டுஉண்டுஉபரதி பெற்றவரே அறமுதல் நாற்பொருட் பயனையும் அடையவல்லராவர்— பிணி மூப்புச் சாக்காடும் பிறவியும் ஒழிந்து பேரின்பம் பெறவல்லராவர் — நித்தியத்துவம் அடையவல்லராவர்—மாயா சொரூபம் ஒழிந்து பிரம சொரூபமாவர். இதுவே தத்துவப் பெரியார் துணிபும் வேத முடிபும் ஆம் என்பதனை உணர முடியாது கடவுள் என்பவர் உலகத்துக்கு அப்பால் வேறு எங்கோ வெகு தூரத்தில் இருப்பவர் என்று கையைத் தூக்கி வானத்தைச் சுட்டிக் காட்டி அமைந்து சோம்பேறிகளாய் வீற்றிருப்பதே லௌகிகம் வேறு பாரமார்த்திகம் வேறு எனத் துணிந்து ஒருபால் ஒதுங்கி அசேதனமாய் மாண்டு போதற்குக் காரணமாகும். இன்னோரன்ன வேத உண்மைகள் எல்லாம் இதுவரை எமது பத்திரிகை வாயிலாக வெளிவந்த கட்டுரைகள் பலவற்றில் பிரபல சுருதிப் பிரமாணங்களோடு

நன்று விளக்கிக்கூறப்பட்டுள்ளன. ஆதலால் அபிமானம் என்னும் தற்சுதந்தரத்தை அறவே ஒழித்து உண்மையை நாடி. அதனைக் கண்டு கொண்டு ஒழுகுவதே உய்யும் திறனாகும். அபிமானம் பாராட்டாது அரிய பெரிய உண்மைகளை எல்லாம் எடுத்துரைக்கும் "வித்தகம்" உருவத்தால் சிறியதேயாகினும் பொருளால் மிகப் பெரியதாய் இணையின்றி இயலும் திறன் அறிஞர் யாவரும் நன்று அறிந்து கொண்ட உண்மையே என்பது அன்னவர் பலரால் பத்திரிகைகள் வாயிலாகவும் நேரிலும் வழங்கப்பட்ட அரிய பெரிய மதிப்புரைகளாலும் வாழ்த்துரைகளாலும் வெள்ளிடைமலையாம்.

## குறள்.

உருவுகண் டெள்ளாமை வேண்டு முருள் [பெருந்தேர்க்
கச்சாணி யன்ன ருடைத்து.

(ஷ 67-ம் அதி. வினைத்திட்பம் செ. 7.)

என்பது தேவர் திருவாக்கு.

சில்லினால் உருண்டு செல்லும் பெரிய தேருக்கு அச்சில்லு வழுவாது நிற்றற்கு இன்றியமையாததாய் அச்சிலின் கடைமுகத்து இடப்பட்ட சிறிய ஆணிபோல, உலக ஆக்கத்துக்கு இன்றியமையாத செயற்கரியன செய்வாரை உடையது இவ் உலகம். ஆதலால் அன்னார் வடிவிற் சிறியராயினும் அச்சிறுமை நோக்கி அவரை இகழாது செயல் விசேடம் நோக்கிப் போற்றி அமையவேண்டும் என்பது இதன் பொருளாகும். ஆதலால் ஆன்மார்த்தமான உய்திக்கு இன்றியமையாத வேத உண்மைகள் நிரம்பிய எமது "வித்தக"த்தை யாவரும் தொடர்பாகப் பெற்றுப் படித்துப் பயனடைவதோடு, மற்றைய புதினப் பத்திரிகைகள் போலச் சரக்கு மடித்தற்கும் பிறவற்றிற்கும் பயன்படுத்தி அலக்ஷியம் செய்யாது ஆண்டு முடிவில் புத்தகமாக்கி வைத்துக் கொள்வாராயின், அப் புத்தகப் பிரதிகள் பின்னாளில் அவர் தமக்கும் பிறர்க்கும் மிகப் பயன்படுவனவாகும் என்பதனை யாம் வற்புறுத்துவது மிகையாகும்.

## குறள்.

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் [அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

(ஷ 43-ம் அதி. அறிவுடைமை செ. 7.)

என்னும் பொய்யில் புலவன் பொருளுரையையும் எமது பத்திரிகை படிப்போர் அறியாதவரல்லர்.

இதுவரை பன்னூற்றுக் கணக்கானோர் எமது "வித்தக"த்தைப் பெற்றுப் படித்து ஆதரித்தனர். சிலர் பலர் இடையிலும் கடையிலும் பத்திரிகைகளை திருப்பிவிட்டமையால் எமக்கு நேர்ந்த நட்டமும் கட்டமும் பெரிதே எனினும், சில பல பத்திரிகைகளைப் படித்து அமைந்தோரும் பண்டைய உண்மைச் சைவக்கொள்கையை ஒரு சிறிதாவது அறியும் புண்ணியம் உடையராயினர் என்பது மட்டில் யாம் உவகையே அடைகின்றேம்.

எமது பத்திரிகையை ஆர்வமுடன் பெற்றுப் படித்து அதனை ஆதரித்த சந்தா நேயர்களுக்கும், மதிப்புரைகள், வாழ்த்துரைகள் வழங்கிய வித்துவப் பெரியாருக்கும், தமிழ் வளர்ச்சிக்குரிய கட்டுரைக் கடிதங்களை அன்புகூர்ந்து உதவிய எமது நண்பர்களும் அறிஞர் பெருந்தகைகளுமாகிய யாழ்ப்பாணம் புன்னாலைக்கட்டுவன் வித்துவான் ப்ரஹ்மஸ்ரீ சி. கணேசையர் அவர்களுக்கும், வேலணையூர் பண்டிதர் கா. போ. இரத்தினம் அவர்களுக்கும், மனமுவந்து நன்கொடைகள் வழங்கிய சைவாபிமான சீலர்களாகிய வள்ளல்களுக்கும் எமது மனமார்ந்த வணக்கத்தையும் நன்றி யறிதலையும் சமர்ப்பிப்பதோடு, இப் பெரியாரெல்லாம் மேலும் இத்தகைய திருப்பணியில் ஈடுபட்டு இன்ப வாழ்வடையும் வண்ணம் எம் பெருமான் திருவடிகளைப் போற்றுகின்றேம்.

ஞமலிக்குத் தவிசிட்ட நலம் போல, இப் பவக் கடன் முழுகி அவசலன மடைந்து அலமரா நின்ற கல்வி யறிவில்லாக் கடையேமாகிய எம்மையும் பொருளெனக் கொண்டு அரிய பெரிய மூல பண்டாரமாகிய வேத உண்மைகளையெல்லாம் அருளிச் செய்து, தோன்றாத் துணையாய் நின்று அவ் உண்மைகளை யெல்லாம் "வித்தக" வாயிலாக வெளியிடுதற்கு ஏற்ற ஆற்றலையும் அளித்தருளிய பரம கருணாநிதியும், ஞான சத்தி வடிவம் எனப்படும் சாந்த சிவ வடிவினனும், அம்பலத்து ஆடும் ஐயனும் ஆகிய புதுவை வாணன் பொன்னடிக் கமலங்களை அவனருளால் புந்தியிலும் சிரத்திலும் வாக்கிலும் வைத்துச் சிந்தித்து வணங்கிப் போற்றி வாழ்வோமாக.

நமப்பார்வதீபதயே! ஹர ஹர மஹா தேவ!

கோகிலாம்பிகை சமேத காமேசன் திருவடி வாழ்க.

ஞானசாரியனாகிய புதுவை நந்தி பொன்னடி வாழ்க.

மணிவாசகன் திருவடிக்குப் பல்லாண்டு.

திருமலவள்ளால் குருமரபு வாழ்க.

சைவம் தழைக.

"வித்தகம்" பல்லாண்டு வாழ்க.

சுபம்.

# "வித்தகம்"

## சந்தா விவரம்.

வருட சந்தா

உள்நாட்டிற்கு முன் பணம் ரூ. 3 0 0

வெளி நாட்டிற்கு „ „ ரூ. 4 0 0

வித்தக நிலையம்,
புதுச்சேரி.

## அறிவிப்பு

கடிதர்களின் அபிப்பிராயங்களுக்கு அவர்களே பொறுப்பாளிகள்.

# உடலுயிர்ச் சம்பந்தம்

(51-ம் வாரத் தொடர்ச்சி)

## தலைநட்பு.

சத்தும் சித்துமாகிய உடல் உயிர்கள் பிரிபடாது ஒழிவற ஒன்றி அசுத்த நிறை முற்றாக நீங்கி அமலமடைந்து நித்தியத்துவம் அடைதற்கேற்ற நிலையே தலைநட்பு எனப்படும். இவ் அரிய பெரிய உண்மையையே "புக்கில் அமைந்தின்று கொல்லோ" என்னும் குறட்பாவினால் மறை பொருளாக்கி உய்த்துணர வைத்தனர் தேவர். உடலுயிர் பிரிபடாதன என்பதே இக்குறளின் உள்ளுறையாகும்.

### குறள்.

புக்கிலமைந் தின்றுகொல்லோவுடம்பினுள்
துச்சி லிருந்த வுயிர்க்கு.

(ஷை 34. அதி. நிலையாமை செ. 10)

(இ-ள்) உடம்பினுள் துச்சில் இருந்த உயிர்க்கு—அசுத்த நிறையின் காரியமாகிய வாத முதலிய நோய்க்கு இல்லாகிய பல கோடி அசுத்த மாயா தநுக்களாகிய மருளுடம்புகள் தோறும் தான் பூரணப்பட வழியில்லாமையால் பல துன்பங்களையும் அடைந்து ஒருவாறு ஒதுங்கியிருந்து புறம்போந்த உயிருக்கு, புக்கில் அமைந்தின்று கொல்—தான் பூரணமாகக் குடிபுகுந்து புறம் போகாது ஒழிவற ஒன்றி நித்தியத்துவம் அடைதற்கேற்ற சொந்த வீடாகிய தூய உடம்பு ஒன்று இதுவரை அமைந்ததில்லை போலும் என்பது. புகு + இல் = புக்கில். உயிர் ஒழிவற ஒன்றிய உடம்பு என்பது. புக்கில் உடம்பு எனப்படுதலை

### மணிமேகலை.

"உயிர்க்கழு தனையே லுயிர்புகும் புக்கில்
செயப்பாட்டு வினையாற் றெரிந் துணர்வரிய
தவ்வுயிர்க் கன்பினை யாயி னுய்தொடி"

என்னும் (76, 77, 78) அடிகளாலும் அறிக.

தான் இனிது வாழ்ந்து ஒழிவற ஒன்றிப் பூரணப்பட்டு நித்தியத்துவம் அடைதற்கேற்ற சொந்த வீடாகிய தூய உடம்பு ஒன்று அமைந்ததாயின் இவ்வாறு அந்நிய வீடுகளாகிய உடம்புகள் தோறும் ஒதுங்கி இருந்து பிரிந்து உழன்று வருந்தமாட்டாது என்பதாம். பக்குவ சீவனுக்கும் அஃது இனிது வாழ்ந்து இல்லறம் புரிந்து பூரணப்படுதற்கேற்ற தூய உடம்பிற்கும் உளதாகிய தொடர்பே தலை நட்பு எனப்பட்டதன் உண்மை இதனால் நன்கு புலப்படுதல் கண்டு கொள்க. இல் என்பது இடம். அறன் எனப்படுவது இல்வாழ்க்கை. ஆதலால் இல் என்பதே அறம். அவ் இல்லின் அசைவு அறம். அவ் அறமே அவ் இடத்தின் பொருள். இடம்—உடல். பொருள்—உயிர். இடமில்லாமல் பொருளில்லை. இடமே பொருள், பொருளே இடம் என்பது அறிஞர் வழக்கு—அறிஞர் துணிபு. அஃதே உண்மை. பொருள் இல்லாமல் இடம் இல்லை—இடம் தோன்றாது. விபகரிப்பதனால் இடமும் பொருளும் இரண்டாகக் கொள்ளப்படுகின்றன. இடமும் பொருளும் ஒன்றேயாம். அன்பின் வழியதாகிய உடலே இடம். அதன் அசைவே அறம். அன்பே பண்பு. அறமே பயன். "அன்பு மறனுமுடைத்தாயின் இல் வாழ்க்கை. பண்பும் பயனும் அது" என்பது தேவர் வாக்கு. இல்வாழ்க்கையின் பண்பே அன்பு. அப்பண்பின் பயனே அறம். அன்பு—அம்பு—அப்பு என்பன ஒன்றே என்பர் மொழிநூலார். அவ் அப்பே உப்பானது—உப்பாக உற்றது. உறல் = பரிசம். உறு + உப்பு = உறுப்பு. உறுப்புக்களின் கூட்டமே சரீரம். இதுபற்றியே,

### குறள்.

அன்பின் வழிய துயிர்நிலை யஃதிலார்க்
கென்புதோல் போர்த்த வுடம்பு.

(ஷை 8 அதி. அன்புடைமை செ. 10.)

எனவும்.

அன்பகத் தில்லா வுயிர் வாழ்க்கை வண்பாற் [கண்.
வற்றன் மரந்தளிர்த் தற்று.

(ஷை ஷை செ. 8.)

எனவும் கூறியருளினார் தேவர் என அறிக. உலகம் உப்பு மயம், அப்பு மயம். இவை இரண்டினுமன்றி உலகம் என்பது இல்லை. இவை இரண்டும் நாத விந்து. இவற்றின் உண்மை யெல்லாம் அமயம் நேர்ந்துழி விரித்துக் கூறப்படும்.

சத்தும் சித்துமாகிய உடலுயிர்கள் கர்மம் காரணமான அசுத்த அசைவுகளால்—அவச்சலனங்களால் தம்முட் பகைமை கொண்டு ஒன்றைவிட்டு மற்றொன்று பிரிந்து போகாமல் பல கோடி சென்ம நற்றவப் பயனாக வந்த பவரோக வயித்தியனாகிய சற்குருநாதன் கருணையால் அருளிய சாதக யோகங்களை வழுவறத் தாங்கி ஒழுகுதலால் அவை தம்முள்ளே தலைநட்புற்று ஒழிவற ஒன்றி அசுத்த நிறை என்னும் காலனைக் காலால் உதைத்து அமல நிறை என்னும் நித்திய நிறை ஆக்கமுறப் பெற்று அள்ளுருக்கையாய்ச் சூக்குமமாய் ஞான சத்தி வடிவாய்ச் சிவாங்கமாதலே உண்மைச் சைவ முத்திநிலை என்பதும், உடம்பைவிட்டு உயிர்பிரிந்தபின் அது பூரணப்பட்டு நித்தியத்துவம் அடைவதென்பது அசம்பாவிதமே என்பதும், உடல் பிணமாக விழ உயிர் பிரியுமாயின் அது பிறவி நெறியேய என்பதும் இவ்வரிய

பெரிய திருக்குறளால் நன்கு விளக்கியருளினார் நமது பொய்யில் புலவர் என்று அறிதல்வேண்டும். திருவள்ளுவர் என்னும் சைவப் பெரியார் அருளிய இத் திருக்குறள் உடலும் உயிரும் ஒழிவற ஒன்றி நித்தியத்துவம் அடையும் நெறியாகிய பண்டைய உண்மைச் சைவக் கொள்கையை நிலைநாட்ட வந்த தெய்வத் தமிழ் மறையே என்பது இந் நூலிற் பொதிந்து கிடக்கும் உண்மைப் பொருளை நுண்ணுணர்வால் கண்டு தெளிவார்க்கு எளிதிற் புலப்படுவதாகும். இது பற்றியன்றோ,

"தேவர்குறளுந் திருநான்மறைமுடிவும்
மூவர்தமிழும்முனிமொழியுங்—கோவை
திருவாசகமுந் திருமூலர்சொல்லும்
ஒருவாசகமென்றுணர்."

என்று பணித்தருளினார் நமது ஔவைப் பிராட்டியாரும் என அறிதல் வேண்டும். உரையாசிரியர்கள் இவ்வுண்மைப் பொருளை எடுத்துக்காட்டி விளக்கிப் போதராமை குற்றமாகாதோ எனின், அவ்வாசிரியர்கள் அறியாமையுடையோரே உலகில் பெரும்பாலார் என நன்குணர்ந்தவராதலால் அன்னவர் பக்குவத்துக்கு ஏற்றவாறே உலக சம்பிரதாயமாக உரை எழுதிப் போந்தார்களாதலின், குற்றமாகாது என்க. உலகியலுக்கு இவ்வாசிரியர்கள் உரை இன்றியமையாததென்பது சொல்லாமலே அமையும்.

உடல் உயிர்களின் பிரிபடாத்தன்மை — ஒற்றுமை — தலைநட்பு ஈண்டு ஒரு சிறிது விளக்கிக் கூறப்படுதல் இன்றியமையாதது. உடல் உயிர்களின் அன்னியோன்னிய சம்பந்தம் அநாதியாக உள்ளது. இவை பிரியாமல் பிரிந்து காட்டும். இடமும் பொருளும் போல உடலும் உயிரும் ஒன்றனுக்கு மற்றொன்று இன்றியமையாதன. இடமில்லாமல் பொருள் இல்லை. பொருள் இல்லாமல் இடம் இல்லை— இடம் தோன்றாது. சீவன் இருவினை சொரூபமாகிய சீரம் மனம் என்பன வாய் வெளிப்படுமென்றி வேறுவகையால் வெளிப்படாது. உயிர் என்பது ஒன்று உடம்பைவிட்டு வேறாக இல்லை என்பது — வேறாக நிற்கமாட்டாது என்பது பின் வரும் திருவாக்குக்களால் நன்கு புலப்படும்.

## ஔவை குறள்.

(உடய்பின் பயன்)

உணர்வாவ தெல்லா முடம்பின் பயனே
உணர்க வுணர் வுடையார்.

ஒருபய னாவ துடம்பின் பயனே
தருபயனாஞ் சங்கரனைச் சார்.

உடம்பினா லன்றி யுணர்வுதா னில்லை
உடம்பினா லுன்னியதே யாம்.

ஓசை யுணர்வுக ளெல்லாந் தருவிக்கும்
நேசத்தா லாய வுடம்பு.

அன்னத்தா லாய வுடம்பின் பயனெல்லாம்
முன்னோனைக் காட்டி விடும்.

## திருமந்திரம்.

உடம்பா ரழியி லுயிரா ரழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கு முபாய மறிந்தேன்
உடம்பை வளர்த்தே னுயிர்வளர்த் தேனே.

(ஷ 3-ம் தந்திரம் சரீரசித்தியுபாயம்
[செ. 1.)

[இவ் அரிய பெரிய திருமந்திரத்தின் உண்மைப் பொருளை அறியும் ஆற்றல் இல்லாதார் சிலர் "மூச்சுப் பயிற்சி" என்னும் அப்பியாசத்தாலும் உணவுகளாலும் உடம்பை வலுவடையச் செய்வதே இதன் பொருள் எனவும், சரீர அப்பியாசமே நித்தியத்துவம் அடைதற்கு இன்றியமையாச் சாதகம் எனவும் "எச்சரிக்கை" செய்து ஓலமிடுவதோடு, தாம் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்றும் சாதிக்கின்றனர். உண்மை என்பது இவர்க்குப் பெரும் பகை போலும்!] (தொடரும்)

## OPINION FROM

**S. ANAVARATAVINAYAKAM PILLAI Esq. M.A., L.T.,**

READER-IN-TAMIL, UNIVERSITY OF MADRAS.

MADRAS.

புதுவை நகரிலிருந்து வியாழக்கிழமை தோறும் வெளிவரும் வித்தகத்தை முதற் சஞ்சிகையிலிருந்து வாசித்துப் பார்த்திருக்கின்றேன். இப்பத்திரிகை மற்றைப் பத்திரிகைகளோடு சேர்க்குந் தரத்ததன்று. தமிழ் மொழிக்குச் சிறந்த செல்வமாயுள்ள திருமந்திரமாலை, திருவாசகம், தேவாரம் முதலிய பெருநூல்களை ஆதாரமாகக் கொண்டு சாகாக் கல்வி முதலிய பேருண்மைகளை விளக்குவதாக வைத்துக்கொண்ட இதன் நோக்கம் வியக்கற்பாலது. இப்பத்திரிகை விரித்துரைக்கும் கொள்கைகளைத் தெளிந்து கொள்வோர் சிலரேயிருக்கக் கூடுமாயினும் அக்கொள்கைகள் ஆராய்ச்சிக் குரியன வென்றுரைப்போர் பலரிருப்பர். இது தமிழ் மக்களின் அறிவு வளர்ச்சிக்கு ஏதுவாயிருக்குமென்பது உறுதி.

குறிப்பு:—எமது பத்திரிகையை ஊக்கத்தோடுவாசித்துஉணர்ந்து,அவ்வுணர்ச்சியினாலாய மதிப்புரையை மனமுவந்து வழங்கிய சிவநேசரும் வித்துவப் பெரியாருமாகிய சைவத் திருவாளர் அனவரத விநாயகம்பிள்ளை அவர்கட்கு எமது தாழ்மையான வணக்கமும் வாய்மையான நன்றியும் என்றும் உரிமையாகற்பாலனவாம்.

(ப-ர்)

# ஸர். ஜகதீச சந்திர வஸு அவர்கள் செய்த பிரசங்கம்.

உங்களிடை வந்து பிரஸங்கம் புரியும்படி என்னை அழைத்த காலத்து ஸம்ஸாரமென்னும் ஸாகரத்தில் ஈடுபடவிருக்கும் மாணவர்களுக்கும் வித்தியார்த்திகளுக்கும் புத்திமதி வார்த்தைகள் இரண்டொன்றை எடுத்துக்கூற எனக்கு ஸந்தர்ப்பம் வாய்ந்ததை யான் ஒரு பெரும் பேறெனக் கருதி அக மகிழ்ந்தேன். நீங்கள் என்னிடம் பாராட்டும் பேரன்புக்கும் பூரண நம்பிக்கைக்கும் ஏதோ ஒரு சிறு கைம்மாறாக என் அறிவுக் கெட்டியவற்றுள் சிறந்ததான விஷயத்தை உங்களுக்குத் தெளியக் கூறுவேன். நான் உங்களுக்குக் கூறவிருக்கும் புத்திமதிகள் எளிதில் பின்பற்ற கூடியன வல்ல. உங்களுடைய பூர்ணப் பிரயத்னங்களையும் அரும்பெருஞ் சக்திகளையும்கொண்டே தான் சாதிக்கற் பாலன. நான் உங்களுக்குச் சுலபமான வழிகளைக் காட்டிவிட வரவில்லை. உங்களுடைய பேராற்றலைத் துணையாகக் கொண்டு அதிக கஷ்டத்துடனும் சிரமத்துடனும் இயற்றக் கூடிய விஷயங்களை மட்டுமே நீங்கள் உங்கள் வாழ்நாட் கொள்கைகளாகக் கைக்கொள்ள வேண்டுமென்று உங்களை நிர்ப்பந்தஞ் செய்ய வந்தவனாவேன் நான். மாணவ தரும இயக்கத்தின் சரித்திரத்தில் தற்போது ஏற்பட்டிருக்கும் நெருக்கடியான நிலைமை ஸாமாந்யமானதன்று. உண்மையான மாணவ தர்மத்தின் அபிவிருத்தியானது இடைவிடாது சாசுவதமாய் முன்னேற்ற மடைந்து வருதற்கு இன்றியமையாதனவாம். இளைஞருக்கே உரிய திடப் பிரதிஞ்ஞையையும் உயரிய தனிப்பெருங் கொள்கையையும் எவ்வித இடையூறு வந்துற்றாலும் சலியாது ஏகாக்ர சித்தத்துடன் பின்பற்றிச் செல்லக்கூடிய திட புத்தியையும் ஆற்றலையும் லாப நஷ்டங் கருதாது பயன்படுத்தவேண்டிய பரமோத்கிருஷ்டமான காலம் இப்போது ஏற்பட்டுள்ளது. நீங்கள் அனைவரும் தத்துவப் பொருளை அல்லது உண்மையை நாடி நிற்கிறவர்கள். அவ்வித உண்மையைக் கண்டறியுமுன் நீங்கள் படவேண்டிய சிரமத்தையும் செய்யவேண்டிய தியாகத்தையும் பற்றி நான் உங்களுக்கு விரிவாய் எடுத்துரைப்பேன். இந்தப் பகீரதப் பிரயத்னத்தில் ஆன்றோர் தேடிவைத்துள்ள வித்தை, வழக்க ஒழுக்கங்கள், நாகரீகமாதி பொக்கிஷங்கள் உற்ற துணையாய் நிர்பன. ஆயின், நீங்கள் பண்டைக் காலத்தினைப் புலியைப் பார்த்துச் சூடிட்டுக்கொண்ட பூனையைப் போல் கேவலம் மூடத்தனமாய் மேற்கொள்ளுதலைத் தவிர்த்தல் வேண்டும். பிராசீந ஆசார வியவகாரங்கள், வித்தை, மனோதருமம் முதலியவற்றின் உள் ஸாராம்சத்தைக் கிரகித்து அறிவை விசாலப்படுத்திக் கொள்ளும் சத் புத்திரர்களாக விளங்குதல் அவசியம்.

## மனிதனுடைய சக்தி
## விதியை மதியால் வெல்லாம்.

மனிதனால் ஆகக் கூடாதனவோ அல்லது அவனுக்கு அசாத்தியமானவோ வாகிய விஷயங்களைப்பற்றி யாவது அல்லது பிறநாடுகளில் சாதிக்கப்பட்டுள்ள விஷயங்களைக் குறித்தாவது நான் பேசப் போவதில்லை; பரத கண்டத்திலேயே செய்து முடிக்கக் கூடியனவும் பண்டைக் காலத்தில் இந்நாட்டினில் சாதிக்கப்பட்டனவுமானவற்றைப் பற்றியே நான் பிரஸ்தாபிக்கப் போகிறேன். நூதன விஷயங்கள் எவ்வாறு கண்டு பிடிக்கப்படுகின்றன என்றதைப் பற்றி யான் பேசப் போகிறேனென நீங்கள் நினைப்பது இயற்கையே. அது மட்டுமே யன்றி, ஜட வஸ்துக்களைப் பற்றியும் அவற்றை யியக்கும் பல்வேறு சக்திகளின் குணா குணங்களைப் பற்றியும் ஆராய்ச்சி செய்வதினின்றும், ஜீவனை உடைய வஸ்துக்கள் மேற்கூறிய பல்வேறு சக்திகளால் பாதிக்கப்படுகின்றன என்ற விஷயத்தை ஆலோசிக்கும் நிலைமைக்கு எவ்வாறு நான் வரலாயினேன், அதன் காரணம் யாது என்றதையு மறிய நீங்கள் ஆவலாயிருப்பீர்கள்.

விஞ்ஞான சாஸ்திர ஆராய்ச்சி சம்பந்தமாக அதற்கு அநுகுணமான காலதேச வர்த்தமானங்கள் கிடையாதெனவும் அத்துறையினதாகிய முயற்சிகள் யாவும் பல்வேறு சந்தர்ப்பா சந்தர்ப்பங்களினால் சோம்பி நிற்கலாகின்றன வென்றும் புகார் அடிக்கடி கிளம்புகின்றது. சந்தர்ப்பா சந்தர்ப்பங்களைக் கண்டு குறை கூறுவது மனிதனுக்கு அழகன்று. ஏற்படும் அசந்தர்ப்பங்களை யெல்லாம், அவற்றைப் பார்த்துப் புறங் காட்டி ஓடாமல் முன் நின்று பொருது, அவற்றின் மீது வெற்றி கொள்வதே மனிதனுடைய தருமமாகும். சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் ஹஸ்தினாபுரி ராஜசபையில் பிறந்த வீரவார்த்தைகளை விரிவா யெடுத்துரைக்கும் மஹாபாரதக் கதை உங்கள் அனைவருக்கும் தெரிந்திருக்கலாம். தேர்ப் பாகன் குலத்திலுதித்தவனாகக் கருதப்பட்ட கர்ணன் அரசிளங் குமாரனும் அர்ஜ்ஜுனனுடைய வீரத்தைப் பழித்து வாதுக் கழைக்க அர்ஜ்ஜுனன் உயர் குடியிற் பிறவாத கீழ் மகனுடன் அரசிளங் குமாரனொருவன் சண்டை செய்வதென்பது ஒவ்வாத காரியமெனத் துச்சமாய் விடையிறுத்தனன்.

(தொடரும்)